# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் **05.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

**திரு முகம்மது ஷகீல் அ·தர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

## <u>வழக்கு எண். CP 1364/SCIC/2023</u>

திரு M. அருள்செல்வம் புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), --- பொது அதிகார அமைப்பு
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
இராமநாதபுரம்.

## <u>ஆணை</u>

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 15.02.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், இராமநாதபுரம் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். இனாம் செட்டில்மெண்ட் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் பதிவுத்துறையின் சுற்றறிக்கை, பதிவுத்துறையின் விதிகளின் நகல், தந்தையின் பெயரில் உள்ள சொத்துக்களை

தனது மகனுக்கு இனாம் செட்டில்மெண்ட் குடுப்பதற்கு தேவையான ஆவணங்கள் என்பன போன்ற தகவல்களை 18 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 16.02.2023 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 10.04.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் CP 1364/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன புகார் மனு குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 25.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 06.12.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த புகார் மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 05.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது.** பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு வீ. ரமேஷ், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், இராமநாதபுரம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 16.02.2023 மற்றும் 28.05.2025 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகல்களையும் விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகயில்லை.

5. மேலும் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து தனது கருத்துக்களை எடுத்துரைக்க மனுதாரருக்கு ஆணையத்தால் வாய்ப்பளிக்கப்பட்டும்

அவர் இன்றைய காணொளிக்காட்சி விசாரணைக்கு ஆஜராகவில்லையென்பதால், **இந்த புகார் மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1364/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்டபதிவாளர் அலுவலகம்,
இராமநாதபுரம்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு M. அருள்செல்வம்,
3/368, ஆஸ்பத்திரி ரோடு,
பரமக்குடி 623 707
இராமநாதபுரம் மாவட்டம்.

Copy to: File TK/PS